செய்தி வெளியீடு எண்: 990 நாள்: 04.11.2026

செய்தி வெளியீடு

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு, மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தின் கிளையைச் சென்னையில் அமைத்திட தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் எழுதியுள்ள கடிதம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச.ஜோசப் விஜய் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தின் நீண்டகாலக் கோரிக்கைகளில் ஒன்றான, மாண்பமை உச்சநீதிமன்றத்தின் கிளையைச் சென்னையில் அமைத்திட தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், பின்வரும் காரணங்களைக் கருத்தில் கொண்டு, இக்கோரிக்கை 1980–ஆம் ஆண்டிலேயே மாநில அரசால் முன்வைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்:–

(a) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 130, "உச்சநீதிமன்றம் தில்லியிலோ அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் இந்தியத் தலைமை நீதிபதி அவ்வப்போது முடிவுசெய்யும் பிற இடத்திலோ அல்லது இடங்களிலோ அமைந்திருக்க வழிவகை செய்கிறது".

(b) இக்கோரிக்கையானது, 1979–ஆம் ஆண்டு நடைபெற்ற தலைமை நீதிபதிகள் மாநாட்டின் ஒரு விவாதப் பொருளாகவும் இருந்தது.

(c) தென்னிந்தியாவில் உள்ள வழக்காடிகள் தங்கள் நீதிசார் தீர்வுகளுக்காக புதுதில்லி வரை செல்ல வேண்டியுள்ளது.

(d) தென்னிந்தியாவின் முக்கிய பெருநகரமாக விளங்கும் சென்னையில், இக்கிளையை அமைப்பது, அனைத்து தென்மாநிலங்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாக அமையும்.

(e) சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்குரைஞர் குழுமமானது, மிக்க சட்ட அறிவும், வாதத்திறமையும் கொண்ட சட்ட வல்லுநர்களைக் கொண்டுள்ளதால், சென்னையில் அமைக்கப்படும் உச்சநீதிமன்றக் கிளையின் தேவைகளை நிறைவு செய்யும்.

(f) சென்னை உயர்நீதிமன்றமானது 1862–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட நாட்டின் மிகத் தொன்மையான முன்னுரிமை உயர்நீதிமன்றங்களில் ஒன்றானது என்பது குறிப்பிடத்தக்கது.

அக்கடிதத்தில், மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதிகளின் பதவித் தரத்திற்கு இணையான குடியிருப்பு வசதிகள் உள்ளிட்ட தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் தவறாமல் மாநில அரசு வழங்கும் என உறுதியளித்திருந்த நிலையிலும், 07.08.2007 அன்று உச்சநீதிமன்றத்தின் முழு அமர்வு இப்பொருண்மை குறித்த தனது முந்தைய தீர்மானங்களிலிருந்து மாறுபடுவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என முடிவெடுத்துள்ள நிலையையும், நமது அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டபோது, ஏழை–பணக்காரர் என்ற பாகுபாடின்றி நாட்டின் அனைத்துக் குடிமக்களும் நீதிமன்றத்தை நேரடியாக அணுகும் வாய்ப்பைப் பெறவேண்டும் என்றே அதனை உருவாக்கிய சான்றோர்கள் விரும்பினர் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பல நாடுகளில் இல்லாத சிறப்பம்சமான அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 32 இயற்றப்பட்டதற்கான முதன்மைக் காரணமும் இதுவே எனவும், நாளடைவில், பிரிவு 32–ன்கீழான தீர்வானது, புவியியல் ரீதியாக இந்திய உச்சநீதிமன்றத்திற்கு அருகில் வசிக்கக்கூடியவர்கள் மற்றும் வழக்குச் செலவுகளையும், பயணச் செலவுகளையும் பொருட்டாகக் கருதாதவர்களுக்கு மட்டுமே நடைமுறையில் சாத்தியமான ஒன்றாக மாறியுள்ளது என்றும், இதனால், குறிப்பாகத் தென்னிந்தியாவில் உள்ள குடிமக்கள் இச்சலுகையைப் பெறும் வாய்ப்பை புதுதில்லிக்கும்,

தென்னிந்திய மாநிலங்களுக்கும் இடையே உள்ள நெடுந்தொலைவு காரணமாகவே இழக்க நேரிடுகிறது என்பனவற்றையும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை (சிவில்) எண்.36/2016 (வி.வசந்தகுமார் –எதிர்– எச்.சி.பாட்டியா மற்றும் சிலர்) வழக்கில் இந்திய உச்சநீதிமன்றம் 13.07.2016 அன்று பிறப்பித்த உத்தரவில், எழுப்பப்பட்ட சட்ட ரீதியான கேள்விகளில், உச்சநீதிமன்றத்தின் அமர்வை அமைப்பது என்பதும் ஒன்றாகும். இவைகுறித்து, ஒரு உறுதியான முடிவைப் பெறுவதற்காக அரசியலமைப்பு அமர்வு ஒன்று அமைப்பதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பதையும், அவ்வாறே, இவ்வழக்கு இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி தலைமையிலான ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியலமைப்பு அமர்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே, தென்னிந்திய மாநிலங்களில், சென்னையின் முக்கியத்துவத்தையும், தமிழ்நாடு மாநிலத்தின் நீண்டகாலக் கோரிக்கை மற்றும் பின்வரும் காரணங்களைக் கருத்தில் கொண்டு, சென்னையில் உச்சநீதிமன்ற அமர்வை அமைப்பது குறித்த இந்திய உச்சநீதிமன்றத்தின் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்து, சாதகமான முடிவைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அக்கடிதத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை வலியுறுத்தியுள்ளார்.

- சென்னையில் உச்சநீதிமன்றக் கிளையை அமைப்பது நமது நாட்டின் உண்மையான கூட்டாட்சித் தன்மையை வெளிப்படுத்தும்;
- 2004, 2006, 2008 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் நாடாளுமன்ற நிலைக் குழுக்கள் இவை தொடர்பாக அளித்த பரிந்துரைகள்;

- **உச்சநீதிமன்றத்தின் நிரந்தர மண்டலக் கிளைகளின் தேவையைத் தொடர்ந்து வலியுறுத்தும் சட்ட ஆணையங்களின் அறிக்கைகள்; மற்றும்**
- **இத்தகைய கிளைகளின் முழுமையான நிர்வாகக் கட்டுப்பாடு இந்தியாவின் தலைமை நீதிபதி அவர்களிடமே உள்ளதால், அவை நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதிக்காது.**

Text of the D.O. letter addressed to the Hon'ble Prime Minister of India Thiru. Narendra Modi from the Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru.C. Joseph Vijay, requesting necessary action to set up a Bench of Supreme Court at Chennai.

I would like to bring to your kind attention one of the long pending demands of the State of Tamil Nadu, to set up a Bench of Supreme Court at Chennai. The above request was earlier mooted by the State during 1980, taking into consideration of the following factors:-

(a) Article 130 of the Constitution of provides that "the Supreme Court shall sit in Delhi, or in such other place or places as the Chief Justice of India may, with the approval of the President, from time to time, decide";

(b) It was being the subject matter of the conference of the Chief Justice held in 1979;

(c) The litigant public of the South India, inevitably need to go to New Delhi to get their grievance redressed;

(d) Chennai, being an important place in the South India, setting up of the Bench in Chennai would benefit all Southern States;

(e) The needs of proposed Supreme Court Bench at Chennai would be met, since the Bar Council of the High Court of Madras, Chennai is highly professionally talented and competent; and

(f) The High Court of Madras, Chennai is one among the oldest chartered High Courts in India established during the year 1862.

However, the Full Court of Supreme Court of India, in its meeting held on 07.08.2007 found no justification for deviating from its earlier resolutions on the subject, despite the State's assurance that necessary infrastructure facilities including residential accommodation for the Supreme Court Judges befitting their status etc., would invariably be provided.

In this connection, I would like to add that when the constitution was enacted, the framers of the constitution contemplated that all citizens of this country, rich or poor must have direct access to the Court. It was the main reason for enactment of Article 32, a privilege not available in many other countries. However, over the time, the remedy under Article 32 is practically available only to citizens who are geographically close to the Supreme Court of India and who are financially privileged to meet the cost of litigation and travel. However, citizens located mainly in the South India is deprived of availing this remedy due to the sheer distance between the Southern States and New Delhi.

I would also like to draw your attention to the fact that the establishment of Supreme Court Bench is one among the questions of law raised for consideration and reference to the Constitutional Bench for an authoritative pronouncement in the orders of the Supreme Court of India, dated 13.07.2016 in W.P. (Civil) No.36/2016 (V.VASANTHAKUMAR Vs. H.C.BHATIA AND ORS.) and accordingly, the same has been referred to the Five Member Constitution Bench of the Hon'ble Supreme Court of India headed by the Hon'ble Chief Justice in W.P. (Civil) No.36/2016.

I am, therefore, confident that you will take necessary steps to take up the above issue afresh with the Supreme Court of India to reconsider its stand and obtain its favourable decision for setting up of a Supreme Court Bench at Chennai, appreciating the long pending demand of the State of Tamil Nadu considering the importance of Chennai among the South Indian States and also the following:-

- Establishment of Bench of Supreme Court in Chennai will reflect the true federal character of our Nation;

- The recommendation of the Standing Committees of Parliament in the years 2004, 2006, 2008 and recently in 2021;
- Law Commissions Reports reiterating the need for permanent regional benches; and
- Such establishment of Bench will not affect the independence of the Judiciary since the control over the same will remain with the Chief Justice of India.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu